தலையங்கம்

படைப்பாக்கமும் ஆளுமை உருவாக்கமும்

மலேசியத் தமிழ் இலக்கியம் பற்றி பலருக்கும் பல அனுமானங்கள் உண்டு. கவிஞர் வைரமுத்துவிடம் கேட்டபோது அவர், "மலேசியாவில் நல்ல இலக்கியம் உருவாகும் சாத்தியம் ஏதுமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில் நீங்கள் எல்லோரும் வசதியாக இருக்கின்றீர்களே. வறுமையில்தான் இலக்கியம் வளரும்" என்றார். ஏழ்மையில்தான் இலக்கியம் வளரும் என்று அவர் சொன்னது கொஞ்சம் நெருடலாக இருந்தது. அவரிடமிருந்தும் இனி நல்ல இலக்கியம் வரும் என எதிர்பார்க்க முடியாதோ என்ற ஏக்கமும் ஏற்பட்டது. மலேசியத் தமிழர்களிடையே ஏழ்மை இல்லை என்ற கண்டுபிடிப்பு ஒரு புறம் மகிழ்ச்சியாக இருந்தது .தன்னைப் போன்ற தமிழ் சினிமா பாடலாசிரியனை அழைத்து, கவுரவித்து, பத்துபவுன் சக்கிலி அணிவித்து மகிழும் மலேசியத் தமிழனிடம் வறுமை அண்டுமா என்ற கணிப்பு சரிதான்.

சென்னையில் இருக்கும் நடிகர் சங்கக் கட்டிடம் கடனில் ஆழ்ந்த போது அந்தக் கடனை அடைக்க கோலாலம்பூரில் கலைநிகழ்ச்சி நடந்தது. கமலஹாசனையும், ரஜினியையும் கட்டித் தழுவி பிறவி சங்கல்பம் அடைந்த தலைவர்கள் ஒருபக்கம், கொள்ளை கொள்ளையாய் சம்பாதிக்கும் கோலிவுட் நடிகர்களின் அசைவுகளை வண்ணவிளக்கொளியில் தரிசனம் செய்து கன்னத்தில் போட்டுக்கொள்ளும் தமிழர்கள் மறுபக்கம். பார்க்க வருத்தமாகத்தான் இருந்தது. வசூல் விண்ணைத் தொட்டது என்றார்கள். பொழுது விடிந்தால் புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டிருக்கும் தமிழர்களின் வீடுகளை இடிக்க புல்டோசர்கள் தும்பிக்கைகளை தூக்கும் நிதர்சனம் பற்றியோ, வாழ்வின் மீதான அத்தனை நம்பிக்கைகளையும் இழந்து தண்டவாளத்தில் குழந்தைகளுடன் தன்னையும் மாய்த்துக் கொண்ட அந்தத் தாயின் துயரம் பற்றியோ எந்தப் பிரக்ஞையும் இல்லாமல் செல்விருந்தோம்பி வருவிருந்துக்கு காத்திருக்கும் இந்தத் தமிழர் கூட்டத்தைப் பற்றி அவர்கள் சரியாகவே கணித்திருக்கிறார்கள். பொருளில் இவர்களிடம் ஏழ்மை இல்லை. அறிவில்தான் என்பதாக அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

ஏழ்மையோ செழிப்போ நல்ல இலக்கியம் உருவாவதற்கானக் காரணிகளாக இருக்கமுடியாது. இலக்கிய உருவாக்கம் பொருளாதாரம் சம்பந்தப்பட்டது அல்ல. மொழியின் தளத்தில் மனம் இயங்கும் சூட்சுமத்தைப் பதிவாக்கும் முயற்சிதானே இலக்கியம் என்பது. ஒரு சமூகத்தில் புழங்கும் மொழியின் வளமும் அந்த மனிதர்களின் ரசனைமிக்க மனமும் கலைஞானமும்தானே இலக்கியத்தின் அடிநாதம். மொழியின் தேர்ச்சியும் வாசிப்பு முயற்சியும் குறைந்த ஒரு சமூகத்தில் இலக்கியம் எப்படி வளரும். ஆறாம் வகுப்பு வரையில் மட்டுமே தமிழ் மொழிக் கல்வி கற்றுத்தரப் படுகிறது. வகுப்பறை புத்தகங்கள் அன்றி அம்மாணவர்களுக்கு வாசிக்கக்கிடைக்கும் புத்தகங்கள் மிகக்குறைவு. பல தமிழ்பள்ளிகளில் நூல்நிலையங்களே கிடையாது. கல்வி என்பது தேர்வுக்குத் தயார் படுத்துதல் என்ற ரீதியில்தான் செயல்பட்டுவருகின்றது. பல தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் பேசிப்பார்த்திருக்கின்றேன். பள்ளிக்கூடப் பாடத்திட்டமும் நமது ஆசிரியர்களின் மன அமைப்பும் படைப்பூக்கத்திற்கு முற்றிலும் எதிரான நிலையிலேதான் செயல்படுவதாக உணரமுடிகிறது. குழந்தைகளின் ரசனைக்கு அடித்தளத்தை அமைத்து தருகிற எந்த முயற்சியும், குழந்தைகளின் கற்பனை விரிவாக்கத்திற்கானச் சூழலும், இங்கே கொஞ்சமும் இல்லை என்பதுதான் உண்மை. குழந்தை இலக்கியம் என்பது குழந்தைகள் மனம், வாசிப்பு சம்பந்தப்பட்டதாக இல்லாமல் புத்தக விற்பனை சம்பந்தப்பட்டதாக இருக்கிறது.

உயர்நிலைப்பள்ளிகளில் நாவல் இலக்கியம் நா.பாவின் ஜிப்பா பையிலும் அகிலனின் சட்டைப்பையிலும் காலங்காலமாகச் சிறைவைக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழங்களில் தமிழ் இலக்கியம் பயின்ற பட்டதாரிகளை தமிழ்க்கூறு நல்லுலகம் தேடிக்கொண்டிருக்கிறது. இங்கே தமிழில் சிறுகதை, கவிதை, நாவல் எழுதுபவர்களில் எத்தனை பேர் பல்கலைகழங்களில் தமிழ் பயின்ற பட்டதாரிகள். இன்று வாசகர் கடிதம் எழுதுபவர்கள் முதல் பாராளுமன்ற வளாகத்தில் 'தமிழ்ப்பள்ளிகளை காப்பாற்றுங்கள்' என்று பதாகைகளை ஏந்தி போராட்டம் நடத்துபவர்கள் வரையில் இந்த ஜனக்கூட்டத்தில் இவர்களை எங்கேயும் காணக்கிடைக்கவில்லையே. இலக்கியம் பயிற்றுவிப்பவர்களின் தகுதிகளா? இல்லை பயிற்றுவிப்பதில் நடக்கும் தவறுகளா? எங்கே அந்தக் குறைகள். இதுநாள் வரையில் பள்ளிகளிலும் சரி, பல்கலைக்கழங்களிலும் சரி வெளிநாட்டிலிருந்து இங்கே யாரையாவது அழைத்து வந்து நமது பள்ளி, பல்கலைக்கழக போதனா முறைகள் குறித்து ஏதேனும் ஆய்வுகள், தரநிர்ணயங்கள் செய்திருக்கின்றோமா? பொருளின் (product) தரத்தைப் பார்த்தே பொருள் உற்பத்தி செய்யும் கருவியின் தரத்தை ஓரளவு நிர்ணயம் செய்யமுடியுந்தானே. மொழிக்கும் இலக்கியத்திற்கும்

பங்களிப்புச் செய்தவர்கள் என்று சொல்லும்படியாக எத்தனைப் பேரை இத்தனை ஆண்டுகாலமாகப் பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளான நமது பல்கலைக்கழங்கள் அடையாளம் காட்டும்.

அடுத்த கேள்வி இதுதான். இளைஞர்களை ஈர்க்கும் படியாக மலேசியத் தமிழ் இலக்கியமும், இலக்கியவாதிகளும் இல்லாமல் போனாது ஏன்? நூல் வெளியீட்டு விழாக்களில் இலக்கியத்திற்கு எள்ளளவும் சம்பந்தமில்லாத அரசியல்வாதிகளை அழைக்க, அவர்களின் தயவு வேண்டி கூனிக்குறுகி நிற்கும் இலக்கியவாதியை எந்த இளைஞன் தான் தனக்கான உதாரண புருஷனாகக்கொள்வான். தனவந்தர்களின் தயவிலும் அரசியல்வாதிகளின் அரவணைப்பிலும்தான் இங்கே இலக்கியமும் இலக்கியவாதியும் வளர வேண்டுமென்றால் அதன் தரம் எதுவாக இருக்கும். தன் அடையாளங்களையே இழந்தவர்களால் எப்படி ஒரு சமூகத்தின் அடையாளங்களைப் பதிவு செய்ய முடியும். தனக்கென பேசுவதற்கென குரலே இல்லாதவன் சமூகத்தின் குரலாக என்ன பேசிவிடப்போகிறான்.

சமூகத்தில் மனித வளம் சார்ந்த எண்ணற்ற தொழில் பிரிவுகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆசிரியர், அரசியல்வாதி, விவசாயி, விஞ்ஞானி, தொழிலாளி, முதலாளி, மருத்துவர், டீக்கடைக்காரர் என விரிந்து பரந்த மனிதத் தொகுதிகளை உள்ளடக்கி இயக்கிக் கொண்டிருக்கிறது மனித சமூகம். இப்பிரிவினருக்குத் தீர்மானிக்கப்பட்ட பொறுப்புக்கள் இருக்கின்றன. அவரவர் திறன், முனைப்பு, செயல், அறிவு சார்ந்து வெற்றிகளும் தோல்விகளும் இவ்விரு நிலைக்களுக்கிடையிலான பல்வேறு ஸ்திதிகளும் அமைகின்றன என பொதுவாகக் கொள்ளலாம். எனில், இவ்வாறான மனித தொகுதிகளில் படைப்பாளி யார்? அவருடைய தனித்துவமான பொறுப்புக்கள் எத்தகையன?

“கனவுகளற்று பரிதவிக்கும் சமூகத்துக்கானக் கனவுகளையும் கண்டடைய வேண்டியவனாகப் படைப்பாளி இருக்கிறான். இப்பொறுப்புத்தான் அவனை தனித்துவமானவனாகவும், அக்கறைகள் நிறைந்தவனாகவும் ஆக்குகிறது” -சி.மோகன்

மலேசிய படைப்பாளியை இதில் எங்கே வைத்து பார்ப்பது? நூல் வெளியீட்டுக்காகத் தலைவர்கள், தனவான்கள்களிடம் தேதி கேட்டு தவம் கிடக்கும் இவனா சமூகத்தின் கனவுகளைக் கண்டடையப் போகிறான்? இளைஞர்களை ஈர்க்கப் போகிறான்? குழு சாராத, கட்சி சாராத, சுயம் இழக்காதவனன்றோ தன் எழுத்தின் வலிமையில் நிற்பான். இலக்கியம் படைப்பான்.

இலக்கிய வளர்ச்சியில் தமிழ்பத்திரிகைகளின் பங்கு என்னவாக இருக்க வேண்டும் என கேட்கும் முன்னர் இலவசமாக எழுத்துக்களையும் படைப்புக்களையும் வாங்கி வெளியிட்டு வரும் வணிக பத்திரிக்கைகளுக்குக் குறைந்த பட்சம் கொஞ்சமாவது வெட்க உணர்வு வேண்டும் என எதிர்ப்பார்ப்பதில் தவறில்லையே.

தரமான படைப்புக்களை வெளியிடுவதும், படைப்பாளிகளை அடையாளம் காட்டுவதும் ஒரு புறம் இருக்கட்டும், தமிழ் சினிமா ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பண்பாட்டுச் சீரழிவிலிருந்தாவது காப்பாற்ற, தமிழர்களின் வாழ்வாதார பிரச்சனைகள் குறித்த சமூக விமர்சனங்களையாவது முன்வைக்க முன்வருமா நமது பத்திரிக்கைகள். பணம் பண்ணட்டும். இனமும் மொழியும் தொடர்ந்து இருந்தால்தானே அந்தப் பணத்தையும் பன் மடங்கு பெருக்க முடியும். (விதிவிலக்காக செம்பருத்தியும், உங்கள் குரலையும் குறிப்பிடத்தான் வேண்டும்.)

“வாழ்க்கைப் பற்றியப் பிரக்ஞையும் விமர்சனமும் சர்ச்சைகளோ அற்ற ஒரு சமூகத்தில் மேலான படைப்புகள் தோன்றுவதில்லை. அதனால்,தரமான படைப்புகள் தோன்ற வேண்டுமென்றால் முதலில் வாழ்க்கை பற்றி தீவிரமான விமர்சனம் உருவாக்கப்பட வேண்டும்”- சு.ரா. நமது பத்திரிகைகள் இத்தகைய ஒரு விமர்சனத்துக்குக் கலம் அமைத்துத் தந்திருக்கிறார்களா? அல்லது இப்படி ஒரு விமர்சனம் அது இலக்கியம் குறித்தோ அரசியல் பற்றியோ சமூக பார்வை மையப்படுத்தியோ நடந்திருக்கிறதா? ஆரோக்கியமான விமர்சனமோ சர்ச்சையோ நடத்த அருகதையற்றவர்களாகத்தானே இருந்து வந்திருக்கிறோம்.

இலக்கியத்தை வளர்க்கிறோம் என்று சூழுரைத்து, இலக்கியப் போட்டிகள், விழாக்கள் இங்கே விமரசியாகக் கொண்டாடப்படும். பல்கலைக்கழக மாணவ இயக்கங்கள் ,தொழிற்சங்கங்கள் , எழுத்தாளர் சங்கங்கள் எதுவுமே எழுதாத ஜாதி சங்கங்கள் இப்படி எல்லாருமாக நாவல், சிறுகதை, கவிதை போட்டிகள் வைத்து மகிழ்வார்கள். இதனால் இலக்கியம் வளரப்போகிறது என்ற நம்பிக்கையுடன் ‘பந்தியில் உட்காராதே என்றவனிடம் இவன் இலை கிழிந்திருக்கிறதே என்றானாம்’. இலக்கியம் குறித்த கல்வி,பயிற்சி,முயற்சி எல்லாமுமே பலகீனமாக இருக்கையில் நாம் நாவல் போட்டிக்குத் தயாராகிறோம். இத்தகையப் போட்டிகளுக்குப் பதிலாக இலக்கிய வாதிகளை இங்கே வருவித்து கருத்தரங்குகள் ,பட்டறைகள் நடத்தலாம். நல்ல இலக்கிய ஆகிருதிகள்,ஆளுமைகளின் கலந்துரையாடல்கள் ,கட்டுரைகள் , வழிகாட்டலிலாவது இங்கே சில இளம் எழுத்தாளர்கள் மன எழுச்சியாவது

கொள்வார்கள். திலிப்குமார்,கலாப்ரியா,மனுஷ்ய புத்திரன்,ஜெயமோகன்,பிரபஞ்சன்,இவர்களின் வருகையில்தான் கொஞ்சமாவது நவீன இலக்கியப் பிரக்ஞை ஏற்பட்டுள்ளது. ‘வல்லினத்தின்’ தோற்றத்திற்கும் இவர்களின் வருகையைக் காரணமாகக் கொள்ளலாம்.

ஒரு மொழி பேசப்படாமல், எழுதப்படாமல், படிக்கப்படாமல் போனால் அம்மொழி அழிந்துவிடும் என சொல்லத் தேவையில்லை. மாறிவரும் சூழலில் அம்மொழி அந்தச் சமூகத்தின் பொருளாதார தேவைக்குச் சிறிதளவேனும் பங்களிக்க முடியாது போகக்கூடுமானால், அம்மொழியின் சொந்தக்காரர்களுக்கு அம்மொழியின் மீதுள்ள பற்று ஒன்று மட்டும்தானே அம்மொழியின் ஜீவியத்திற்கான நியாயத்தைக் கற்பிக்க முடியும்.

மொழிப்பற்றும், இனப்பற்றும் அற்ற அந்தச் சமூகத்தின் படித்தவர்களால், சமூகத்திற்கு எந்த பங்களிப்பும் தராத அதன் பட்டதாரிகளால் நிர்கதியாக அந்தச் சமூகமும், மொழியும் நிற்குமானால், அந்தப் பல்கலைக்கழகங்களால் என்ன பயன்?இனியாவது நமது பல்கலைக்கழகங்கள் சமூக அக்கறை உள்ள இளைஞர்களையும் இலக்கியவாதிகளையும் உருவாக்கித் தருமா?

மா.சண்முக சிவா